DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

CC.200/2019

Prosecution witness – PW 2

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.கருப்பசாமி | Caste: | |
| Father's Name | : | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

(A1, A3 present. A2, A4 absent. Petition U/s 317 Cr.P.C filed and allowed.)
02.02.2026– 02.40 PM

முதல் விசாரணை:–

1. நான் மேலக்கிடாரம் கிராமத்தில் குடியிருந்து தமிழ்நாடு உப்பள நிறுவனத்தில் ஆப்ரேட்டராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் 1, 3 மற்றும் 2, 4 ஐ எனக்கு தெரியும். அ.சா.1 எனது மனைவி. பட்டியல் சாட்சிகள் 3 வீரலெட்சுமியை எனக்கு தெரியும்.

2. கடந்த 05.07.2017 ம் தேதி எனது வீட்டிற்கு அருகே நான் புதியதாக வாங்கிய பட்டா இடத்தில் எதிரியின் சமுதாயத்தை சேர்ந்தவர்கள் பஞ்சவர்ணம் என்பவரின் இறுதி சடங்கில் குடம் உடைப்பதற்காக வந்தார்கள். அப்போது எனது மனைவி பஞ்சவர்ணம் மேற்படி இடம் எங்களுக்கு சொந்தமானது தள்ளிகொண்டு போய் குடத்தை உடையுங்கள் என்று பேசினார். எதிரிகள் சத்தியமூர்த்தியும், தர்மலிங்கமும், அப்போது எனது மனைவி பார்த்து என்னடி தேவிடியா இங்கே உடைக்காமல் பின் உன் வீட்டிற்கு வந்தா உடைப்பார்கள் என்று பேசி கன்னம் மற்றும் முதுகில் எனது மனைவியை அடித்தார்கள்.

3. எதிரிகள் லட்சுமியும, சாந்தியும் எனது மனைவியின் தலைமுடியை பிடித்து இழுத்து முதுகில் கையால் குத்தினார்கள். எதிரி சத்தியமூர்த்தியும், தர்மலிங்கமும் காலால் எனது மனைவியை எட்டி உதைத்தார்கள். நானும் எனது தங்கை வீரலெட்சுமியும் அன்றைய தினமே மாலை 05.00 மணியளவில் கீழச்செல்வனூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். காயம்பட்ட எனது மனைவியை கடலாடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக

அழைத்துச்சென்றார்கள். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

இந்த வழக்கு சம்மந்தமாக என்னை எந்த தேதியில் எங்கு வைத்து போலீசார் விசாரித்தார்களா என்றால் அன்றைய தினமே காவல் நிலையத்தில் வைத்தும் பின்னர் வீட்டில் வைத்தும் விசாரணை செய்தார்கள். போலீசார் விசாரணையின் போது நான் முதல் விசாரணையில் கூறிய விவரங்களை தான் கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் வேலை செய்யும் உப்பள நிறுவனம் வாலிநோக்கத்தில் உள்ளது. சம்பவ நடந்த இடத்திலிருந்து வாலிநோக்கம் உப்பள நிறுவனம் சுமார் 06 கி.மீ தூரம் இருக்கும்.

சம்பவம் தினத்தன்று ஜாதியை சொல்லி திட்டியதாக எனது மனைவி மீது எதிரிகள் புகார் கொடுத்து ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். விசாரணை நீதிமன்றம் எனது மனைவியை குற்றவாளி என்று முடிவு செய்துள்ளது என்றால் சரிதான். நான் மேல் முறையீடு தாக்கல் செய்துள்ளேன். எங்கள் சமுதாயத்தை சேர்ந்தவர்கள் எங்கள் ஊரில் எவ்வளவு நபர்கள் இருப்பார்கள் என்றால் சுமார் 18 குடும்பங்கள் உள்ளது. நான் சொல்வது போல் எந்த சம்பவத்தையும் பார்க்கவில்லை என்றாலும், அ.சா.1 எனது மனைவி என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

நான் சம்பவ தினத்தன்று சம்பவ இடத்தில் இல்லை என்றாலும், உப்பள நிறுவனத்தில் வேலையில் இருந்தேன் என்றாலும் சரியல்ல. எனது மனைவி தான் எதிரிகளை தவறாக பேசினார் என்றாலும், 1வது எதிரி என் மனைவி மீது கொடுத்த புகாரிலிருந்து தப்பிப்பதற்காக என் மனைவி எதிரி மீது கொடுத்த பொய்யான புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2026.02.02 18:01:38 +0530